செ.வெ.எண்: 222 நாள்: 23.03.2019

**திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட பதற்றமான வாக்குச்சாவடிகளில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் திருச்சிராப்பள்ளி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் புதுக்கோட்டையில் நடைபெற்றது.**

---

திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள சட்டமன்ற தொகுதிகளில் பதற்றமான வாக்குச்சாவடிகளில் மேற்கொள்ள வேண்டிய பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டம் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் திருச்சிராப்பள்ளி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் புதுக்கோட்டை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமா மகேஸ்வரி இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் இன்று (23.03.2019) நடைபெற்றது. பின்னர் திருச்சிராப்பள்ளி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது.

திருச்சிராப்பள்ளி பாராளுமன்ற தொகுதியில் புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள புதுக்கோட்டை மற்றும் கந்தர்வக்கோட்டை ஆகிய 2 சட்டமன்ற தொகுதிகள் உள்ளன. இந்த சட்டமன்ற தொகுதிகளில் 41 பதற்றமான வாக்குச்சாவடிகள் உள்ளன. இந்த பதற்றமான வாக்குச்சாவடிகளில் மேற்கொள்ள வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து இன்றையதினம் ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. இதில் பதற்றமான வாக்குச்சாவடிகளில் கூடுதல் காவலர்கள் நியமித்தல் மற்றும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்துதல் உள்ளிட்ட பல்வேறு பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருச்சி பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட புதுக்கோட்டை, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அரசியல் கட்சியினர் பிரச்சார வாகன அனுமதியை தவிர்த்து பிற அனுமதிகளை புதுக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அரசியல் கட்சியினர் புதுக்கோட்டை உதவி தேர்தல் நடத்தும் அலுவலரான புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியரிடமும், கந்தர்வக்கோட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அரசியல் கட்சியினர் கந்தர்வக்கோட்டை சட்டமன்ற தொகுதி உதவி தேர்தல் நடத்தும் அலுவலரான மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலரையும் அணுகி உரிய அனுமதி பெறலாம். இவ்வாறு திருச்சிராப்பள்ளி மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.சிவராசு இ.ஆ.ப., அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.எஸ்.செல்வராஜ், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, புதுக்கோட்டை வருவாய் கோட்டாட்சியர் திரு.தண்டாயுதபாணி, வட்டாட்சியர் (தேர்தல்) திரு.திருமலை மற்றும் தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**